2 FEB 1972

Registered as a News Paper Ceylon 11 சதம் 15 ☆ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily
தேசிய தினசரி

தபால் பெட்டி எண்; 49
போன் 389

மலர் 13
இதழ் 352

யாழ்ப்பாணம் தை 19 துல்ஹஜ் 16 புதன்கிழமை (2-2-72)

குறைந்த செலவில்
சிறந்த சேவை

கொழும்பு ஒப்ரிக்கல்
95, ஸ்ரான்லி றேட் - யாழ்ப்பாணம்
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்-மேல் மாடி)
கிளை:
65, N. C. றேட் திருக்கோணமலை.

# அடையாள அட்டைக்கு மனு அனுப்பாவிடில் ரூ. 1000 தண்டம்

## மார்ச்முதல் 6 மாதத்துக்குள் மனுச்செய்யவேண்டும்

கொழும்பு, செவ்.

இவ்வருடம் மார்ச் மாதம் முதல் திகதியிலிருந்து ஆறுமாத காலத்துக்குள் அடையாள அட்டைகள் பெறுவதற்கு விண்ணப்பிக்காதவர்கள் பின்னர் ஆயிரம் ரூபாய் அபராதத்தொகை செலுத்த வேண்டும்.

பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் தங்களது புகைப்படப் பிரதிகள் மூன்று எடுக்க வேண்டுமென்றும் இதற்கு ஆளுக்கு ஒரு ரூபாய் செலுத்துவதுடன் அடையாள அட்டை பெறுவதற்கான முத்திரைக்கு ஒன்றரை ரூபாய் செலுத்தவேண்டுமென்றும் மொத்தம் அடையாள அட்டை பெறுவதற்கு இரண்டரை ரூபாய் செலவிடவேண்டுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

இன்றைய பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த திரு. டபிள்யு. ரி. ஜயசிங்க, திரு. எக்கநாயக்கா ஆகியோர் நடாத்திய பத்திரிகை நிருபர்களின் மகாநாட்டில் இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

சட்டவிரோதக் குடியேற்றத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதுடன் இலங்கைப் பிரஜைகளுக்குப் பலவிதங்களிலும் அடையாள அட்டைகள் உதவிபுரியுமென்றும், இத்திட்டத்திற்கு சுமார் 95 இலட்சம் ரூபாய் செலவாகுமென்றும் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு ஜயசிங்கா தெரிவித்தார்.

அவசியமேற்படின் 1 வயதுக்கு உட்பட்டவர்களுக்கும் அடையாள அட்டை வழங்குவது பற்றி ஆலோசிக்கப்படுமென்றும் அவர் சொன்னார்.

தற்காலிக வாசஸ்தல பர்மிட்டில் இங்கு வசிப்பவர்களும், வாசஸ்தல விசா முடிவடைந்தவர்களும், தூதரக ஊழியர்களும் அடையாள அட்டைகள் பெறுவதிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்கள் என்றும் அவர் சொன்னார்.

## குமாரசூரியர் தொடர்ந்து அமைச்சராக இருப்பார்

கொழும்பு, செவ்.

ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அமைச்சரவையில் தொடர்ந்தும் தபாலமைச்சராக இருக்குமாறு பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தபாலமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியரைக் கேட்டுள்ளார்.

திரு. குமாரசூரியர் பதவியில் தொடர்ந்தும் இருப்பதா அல்லது பதவியைத் துறப்பதா என்பதை நிர்ணயிக்க அரசியல் சட்டத்தின்படி வழங்கப்பட்ட 4 மாத காலக்கெடு இன்றுடன் பூர்த்தியாகிறது. இதனால்தான் தொடர்ந்தும் பதவியிலிருக்குமாறு பிரதமர் கேட்டுள்ளார்.

அரசியல் திட்ட விவகாரங்கள் பற்றிப் பேசுவதற்கு தான் தகுதிவாய்ந்த அதிகாரியல்லவென்றும், இவ்விடயங்களெல்லாம், பிரதமர் கையிலேயே உள்ளதென்றும், தற்சமயம் இதுவே தன்னால் கூறமுடியுமென்றும் தபால் அமைச்சர் தெரிவித்தார்.

திரு. குமாரசூரியர் போன்று செனட்சபையில் இருந்து அமைச்சர் பதவி வகித்த நீதி அமைச்சர் திரு. ஜே. எம். ஜெயமான சமீபத்தில் பதவியைத் துறந்துள்ளமை யாவரும் அறிந்ததே.

## கள்ளுத் தவறணை திறக்க மக்கள் வங்கி கடன் வசதி

### இரண்டரை லட்சம் ரூபாய் வரை வழங்குவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், புதன்.

மரவரி முறையை ஒழித்துத் தவறணை முறையை மார்ச் மாதம் முதல் செயற்படுத்தும் அரசாங்கத்தின் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான விரிவான ஏற்பாடுகள் இப்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கள்ளுத் தவறணைகளைத் தனியாருக்குக் குத்தகைக்குக் கொடுக்காமல் கள்ளிறக்கும் தொழிலாளர்களே கூட்டுறவுச் சங்கம் அமைத்து அச்சங்கங்கள் மூலம் தவறணைகளை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஏற்பாட்டின்படி யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒவ்வொரு தவறணை திறப்பதற்கும் முதலீட்டுப்பணமாக இரண்டு இலட்சத்திலிருந்து இரண்டரை இலட்சம் ரூபாய் வரை தவறணை திறப்பதற்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மக்கள் வங்கி கடனாகப் பணம் வழங்கும்.

இதன்படி சுமார் அறுபது இலட்சம் ரூபாய் வரை கள்ளுத் தவறணைகள் திறப்பதற்கு மக்கள் வங்கி கடன் வழங்க முன்வந்துள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஒரு மகாநாட்டில் கடன் வழங்கும் திட்டம் பற்றிய முடிவு எடுக்கப்பட்டது. இந்த மகாநாட்டில் மக்கள் வங்கித் தலைவர், கூட்டுறவு ஆணையாளர், கலால் கமிஷனர், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா ஆகியோர் கலந்துகொண்டனர்.

தவறணை மூலம் கிடைக்கும் இலாபத்தில் கள்ளிறக்கும் தொழிலாளருக்கு ஒரு பங்கு கொடுக்கப்படுவதுடன் போத்தல் கள்ளின் விலையைவிடத் தொழிலாளருக்குக் கூடுதலான பணம் வழங்கவும், வருட முடிவில் அவர்களுக்குப் "போனஸ்" வழங்கவும் உத்தேசித்திருப்பதாகவும் இந்த மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

கள்ளிறக்கும் தொழிலாளருக்குச் சேமநல வசதிகளும் செய்து கொடுப்பதற்கான திட்டமும் வகுக்கப்பட்டிருக்கிறதாம்.

......

## கம்யூனிஸ்ட் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம், புதன்

பல கோரிக்கைகளை முன்வைத்து ரஷ்யசார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் சுவரொட்டிகள் யாழ்நகர் சுவர்களிலும் பொது இடங்களிலும் ஒட்டப்பட்டிருக்கின்றன.

இச் சுவரொட்டிகள் தமிழிலும் சிங்களத்திலும் இடம் பெற்றிருக்கின்றன. சாதித் தீண்டாமையை ஒழிக்கும்படியும் பிரபல ஸ்தாபனங்களை தேசியமயமாக்கும்படியும் நிலத்திற்கு உச்சவரம்பு விதிக்கும்படியும் இச்சுவரொட்டிகளில் கோரிக்கை விடப்பட்டிருக்கின்றது.

## கஞ்சாக்கடத்தலில் இருமாலுமிகள்

### கடலுக்குள் வீசிவிட்டு கோட்டை நகரில் மறைந்தனர்

கொழும்பு, செவ்.

பதினையாயிரம் ரூபாய் பெறுமதியான கஞ்சாவைக் கடத்திச் செல்ல முயன்ற இரு மாலுமிகளின் முயற்சி கொழும்புத்துறைமுகத்தைச் சேர்ந்த சுங்கத் தடுப்பு அதிகாரிகளின் நடவடிக்கையினால் முறியடிக்கப்பட்டது.

கஞ்சாக் கடத்தல் முயற்சியை சுங்கத்தடுப்பு அதிகாரிகள் கண்டுபிடித்ததும், கஞ்சாப்பார்சல்களைக் கடலில் வீசிவிட்டு இருமாலுமிகளும் கோட்டை நகருக்குள் ஓடி மறைந்துவிட்டனர்.

இவர்களைத் தேடுவதில் பொலிசார் சுங்கத்துறையினருடன் இக்கடத்தல் முயற்சி பற்றி புலன்விசாரணையும் மேற்கொண்டுள்ளனர். (நா)

## புதைகுழியில் 1000 சடலங்கள்

டாக்கா, செவ்

பங்களாதேஷில் மேலும் ஒரு புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இப் புதைகுழியில் ஆயிரம் மனித எலும்புக் கூடுகள் கிடக்கக் காணப்பட்டன. சில தினங்களுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழியில் இரண்டாயிரம் மனித எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டன.

## மைசூருக்கு புதிய கவர்னர்

பங்களூர், பெப். 1

மைசூர் கவர்னராக திரு. மோகன்லால் சுக்காடியா இன்று பதவியேற்றுக்கொண்டார். இதற்கு முன்னர் கவர்னராக இருந்த திரு. தர்மவீரா மத்திய அரசாங்கத்தைக் கண்டித்துப் பேசியதும்; அவரை ஜனாதிபதி கண்டித்ததும் குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டுக்கு ரூபா 6000

பருத்தித்துறை, செவ்: தெல்லிபடி பட்டினசபைக்கு விளையாட்டுத் திணைக்களம் ரூபா 6000 பெறுமதியான பந்துகள், வலைகள், சீருடைகள் போன்ற விளையாட்டுக்கான பொருட்களை அனுப்பி வைத்துள்ளது. மிக விரைவில் மேற்படி பட்டினசபையால் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டிருக்கும் விளையாட்டு மைதான வேலைகள் பூர்த்தியானதும் பல்வேறு விளையாட்டுகளும் நடைபெறவிருப்பதாகத் தெரிகிறது. மேற்படி விளையாட்டு மைதானம் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. கே. பி. இரத்திநாயக்காவினால் சம்பிரதாய முறைப்படி திறந்துவைக்கப்படுமெனவும் தெரிகிறது.

திருக்கேதீச்சரத்தில்

## சிரமதானம்

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை சைவ இளைஞர் பேரவையின் ஆதரவில் திருக்கேதீச்சரத்தில் 13-2-72 நடைபெறவிருக்கும் மகா சிவராத்திரியை முன்னிட்டு பெப்ரவரி 6, 7, 8-ம் திகதிகளில் பாலாவிக் குளத்தைத் துப்புரவு செய்தல், ஆலயச் சுற்றாடலிலுள்ள முட்செடிகளை அகற்றுதல் ஆகிய சிரமதான வேலைகள் சைவமக்களால் நடைபெறவிருக்கின்றன.

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

எம். ஜி. ஆர். இரு வேடங்களில் ஜெயலலிதா-அசோகன் நடித்த

**நீரும் நெருப்பும்**

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

சிவாஜி — ஜெயலலிதா முத்துராமன் - நாகேஷ் நடித்த

**சவாலே சமாளி**

**வெலிங்டன் - லிடோ**

(யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 10-00 சனி, ஞாயிறு, 10-30

தினசரி காலை 10-00, மணிக்கு மட்டும்



★ சிவாஜி ★ பத்மினி ★ நாகேஷ் ★ தங்கவேலு நடித்த

**வியட் நாம் வீடு**

லிடோ (யாழ்ப்பாணம்) தினசரி 2-00, 6-00, 9-30.

சிவாஜி பத்மினி நடித்த

**தில்லானாமோகனாம்பாள்**

**யாழ். வின்ஸர் வெண்திரையில்**

தினசரி 4 காட்சிகள்

சிவாஜி கணேசன் ★ ஜெயலலிதா

தங்கவேலு, தேங்காய் சீனிவாசன், நாகேஷ், மூர்த்தி, குமாரி சச்சு, வி. கோபாலகிருஷ்ணன் நடித்த

சிவாஜி கணேசன் அளிக்கும்

**சுமதிஎன்சுந்தரி**

(முழு நீள வண்ணக் கலர்) டைரக்‌ஷன்: ஸி. வி. ராஜேந்திரன்

**பவானி சினிமா**

மூளாய்

தினசரி 6-15 இரவு 9-30 சனி, ஞாயிறு 2-30

ஜெய்சங்கர் - ஜமுனா நடித்த

**குழந்தையும் தெய்வமும்**

**சாந்தி**

(சங்கானை)

தினசரி 6-15, 9-30 ஞாயிறு 2-30

சிவாஜி — பத்மினி நடித்த

**இரு மலர்கள்**

3-ம் திகதி வரை

**நியூ கலிங்கன்**

இணுவில்

தினசரி 6-30, இரவு 10-00 சனி ஞாயிறு 2-30

ஆசாத் சித்ரா நடித்த

**ஜிம்போ**

**யாழ். தியேட்டர்**

(காங்கேசன்துறை

தினசரி 6-15, இரவு 9-30 சனி, ஞாயிறு 2-30

சிவாஜி - கே. ஆர். விஜயா நடித்த

**ராமன் எத்தனை ராமனடி**

**நாகம்மாள் சினிமா**

சுன்னாகம்

தினசரி 4-30 மட்டும் சனி, ஞாயிறு 10-30

ON FRIDAY AT ELEVEN

தினசரி 6-30 9-45 சனி, ஞாயிறு 2-30

**பட்டணத்தில் பூதம்**

நாளை முதல்

**வா ராஜா வா**

**மனோஹரா**

(யாழ்ப்பாணம்)

தினசரி 2-30 6-30, 10-00

என். டி. ராமராவ்-காந்தாராவ் ஜெயலலிதா - ஜோதிலக்ஷ்மி நடித்த

**விடாக் கண்டன் கொடாக்கண்டன்**

தினசரி 10-30 மட்டும்

BANDITS IN ROME

(Scope-Color)

REGAL (Jaffna)

Daily 5-15 & 7-15 p.m.

Sat. Sundays 10-30

Dirk Bogarde

Michael York

in

JUSTIN

(color)

தினசரி 2-00, இரவு 10-00

சிவாஜி - சௌகார் ஜானகி நடித்த

**பாவை விளக்கு**

# வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஒட்டுவேலைகள் பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gear wheel cutting) என்ஜினியரின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 3846

### தேவை

நற்பழக்கமுள்ள விற்பனையாளர்கள் தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் சமுகந்தரவும். எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 3845

டாக்ரூம்-றீ-ரச்சிங் தெரிந்த ஒருவர் தேவை. விண்ணப்பிக்கவும்: லக்கி போட்டோ, மன்னார். 3963

வைத்திய நிலையத்தில் கடமையாற்றுவதற்கு ஆங்கில அறிவுடைய பெண் தேவை. ரூபா 750/- பிணைப்பணம் கட்டக்கூடியவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும். ஸ்ரீ சாயிபாபா மெடிக்கல் கிளினிக், 185, பலாலி ரோட், கோண்டாவில் கிழக்கு. 3961

பீடி சுற்றும் அனுபவம் வாய்ந்த பெண்கள் தேவை. சகல வசதியும் செய்து கொடுக்கப்படும் நேரில் சந்திக்கவும் 2-2-72வே. நவரத்தினம், கனபூமி பிள்ளையார் கோவிலடி காரைநகர். 3966

### வைத்தியம்

ஆலோசனை இலவசம். பல் கட்டுதல் அரைச் சட்டம் Rs 150/-. சிங்கப்பூர் பல் கட்டுமிடம், A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 2ம் மாடி ஆஸ்பத்திரி வீதி - பெரிய கடை, யாழ்ப்பாணம். 3869

### சோதிடம்

நிறம், வயது, பூவின் பெயர், குறித்து, 15 சத முத்திரையுடன் எழுதியனுப்பி பதில் பெறவும், இலவச சேவை] மனோதத்துவ ஆருடம், ஞானபண்டித வைத்தியசாலை, அதிபர் ந. சண்முகராஜா, கொக்குவில். 3900

### கல்வி

ஆரம்ப வகுப்புகள், ஜி. சி. ஈ., அரசாங்க ஊழியர்களுக்கான சகல பரீட்சைகளுக்கும் தபால் மூலம் சிங்களம் கற்பிக்கப்படும். வெற்றிவேல் போதனை நிலையம் (தபால் மூலம் கல்விப் பகுதி) கொக்குவில் மேற்கு, கொக்குவில். 3888

### திருமணம்

ராதாகிருஷ்ணன்—

நாகேஸ்வரி

ஏ. முருகேசனின் மனைவி திருமதி பொன்னம்மா, 13/1 கச்சேரி கிழக்குலேன், யாழ்ப்பாணம்; எஸ். கணபதிப்பிள்ளையின் மனைவி திருமதி மகேஸ்வரி, மானிப்பாய் மேற்கு, மானிப்பாய், தமது மக்கள் செல்வன் ராதாகிருஷ்ணனுக்கும் செல்வி நாகேஸ்வரிக்கும் 4-2-1972 மு. ப. 7-00 - 9-00 மணிக்கிடையில் மருதடி பிள்ளையார் கோவிலில் நடைபெறும் திருமணத்திற்கு உறவினர், நண்பர் அனைவரையும் அழைக்கின்றனர். தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை. எம். ராதாகிருஷ்ணன். 3972

**வெல்லி சினிமா**

(மானிப்பாய்)

தினசரி 6-30, 10-00 சனி, ஞாயிறு 2-30

சிவாஜி - பானுமதி நடித்த

**ரங்கோன் ராதா**

### விற்பனைக்கு

EY 8315 ஏரியல் ரூபின் டபிள் சிலிண்டர் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. S. பத்மநாதன், மார்க்கட் லேன், சங்கானை கிழக்கு, சங்கானை. 3962

நல்ல நிலையிலுள்ள 5 தையல் இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு. ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஏற்ற மெஷின்கள் உண்டு. வாங்குபவர்கள் நல்ல பலனையடையலாம். விளம்பர இல. 3970, C/o "ஈழநாடு", யாழ்ப்பாணம் 3970

### வாடகைக்கு

50 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தக் கூடிய வசதியான தொழிற்சாலை குத்தகைக்கு உண்டு. விளம்பர இல. 3971, C/o "ஈழநாடு" யாழ்ப்பாணம். 3971

### நன்றி நவிலல்

27-1-72-ல் நல்லூர் சிவன் கோவில் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி வைபவத்தில் பங்குபற்றிச் சிறப்பித்து ஆதரவுகாட்டிப் பெருமைப்படுத்திய அன்பர்கள், வாழ்த்தனுப்பியவர்கள் யாவருக்கும் உளங்கனிந்த நன்றியை அன்புடன் தெரியப்படுத்துகிறேன். தி. இ. சீதாராம சாஸ்திரிகள், 173, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 3976

கே. சின்னத்தம்பி; அண்மையில் அகால மரணமடைந்த திரு. கே. சின்னத்தம்பி (விஸ்வமடு படித்த வாலிபர் விவசாய குடியேற்றத் திட்டம்)யின் மரணச்சடங்கு முதலிக்குளி, கரணவாய் தெற்கு, கரவெட்டியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். கே. வல்லிபுரம். 3974

### கேள்வி விளம்பரம்

இடைக்காடு றோட்டுக்கும், கேணியடி வைத்தியசாலை தலைமை றோட்டுக்கும் புதுக்குடியிருப்பு கி. ச. தலைவரால் 22-2-72 காலை 11 மணிவரை பதிவு செய்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒவ்வொரு வேலைக்கும் கேள்விப்பணம் ரூபா 50/-ம் போக் காசு ரூபா 10/-ம் 21-2-72-க்கு முன் கட்டிப் பத்திரங்களிலேயே நிரப்புதல் வேண்டும். பத்திரப்பணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

வேலை விபரங்களை இச்சபையிலும் முல்லைத்தீவு நிறைவேற்றுப் பொறியியலாளரின் கந்தோரிலும் வேலை நேரங்களில் அறியலாம்.

சி. சிதம்பரப்பிள்ளை
கி. ச. தலைவர்
புதுக்குடியிருப்பு
முல்லைத்தீவு.
31-1-72 3975

### உபதலைவராக தெரிவு

வல்வெட்டித்துறை, செவ்: வல்வெட்டித்துறை பட்டினசபையின் உப தலைவராக திரு. இ. மகாலிங்கம் இன்று தெரிவு செய்யப்பட்டார்.

7-ம் வட்டார அங்கத்தவர் திரு. சு. நாராயணசாமி பிரேரிக்க, 4-ம் வட்டார அங்கத்தவர் திரு. பொ. வேலும்மயிலும் ஆமோதிக்க 9-ம் வட்டார அங்கத்தவர் திரு. இ மகாலிங்கம் உப தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

# பாக். பெற்ற கடன்களுக்கு பங்களாதேஷ் பொறுப்பல்ல!

# முஜிபுரின் அறிவிப்பால் பாக். பொருளாதாரத்தில் மேலும் சிக்கல்!

டாக்கா, பெப். 1

வெளிநாடுகளிடமிருந்து பாகிஸ்தான பெற்ற கடன்களுக்கு பங்களாதேஷ் பொறுப்பேற்காதென்று பங்களாதேஷ் பிரதமர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் அறிவித்துள்ளார்.

டேவிட் குரோஸ் என்பவருக்கு அளித்த தொலைக்காட்சிப் பேட்டியிலேயே இதனை முஜிபுர் தெரிவித்திருக்கிறார்.

இதுபற்றி ஷேக் முஜிபுர் ரஹ்மான் மேலும் தெரிவிக்கையில், பாகிஸ்தான் வெளிநாடுகளிலிருந்து 2000 கோடி ரூபாவைக் கடனாகப்பெற்றிருந்தது. இதில் மிகமிகச் சிறுபகுதியையே பங்களாதேஷுக்குச் செலவிட்டது. பாகிஸ்தான் இராணுவம் எடுத்த பயங்கர நடவடிக்கையின் பங்களாதேஷிலுள்ள 85 வீதத்துக்கும் அதிகமான மக்கள் மிகவும் கஷ்டமான வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை நிலைமை பங்களாதேஷ் அரசு சீர்படுத்தியாகவேண்டும் என்றார்.

### பூட்டோவுக்கு எச்சரிக்கை

பிரதமர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் முஜிப் பாஹினிப் படையினர் ஒப்படைத்த ஆயுதங்களை ஏற்றுக்கொண்டார். இவ்வைபவத்தில் அவர் பேசுகையில், பங்களாதேஷ்மீது நிர்ப்பந்தங்களை ஏற்படுத்துவதை பாகிஸ்தான் ஜனாதிபதி பூட்டோ கைவிடவேண்டும் என்று எச்சரித்தார். பாகிஸ்தானுக்கும் பங்களாதேஷுக்கும் தொடர்பு ஏற்படுத்துவதென்ற பிரச்சினை எப்பொழுதோ செத்துவிட்டது என்று கூறிய அவர், ஏகாதிபத்திய முதலாளித்துவ வாதிகள் பங்களாதேஷில் குழப்பநிலையை ஏற்படுத்த முயற்சிப்பதாகக் கண்டித்தார்.

பங்களாதேஷில் நடைபெற்ற கொடுமைகளுக்குக் காரணமாக இருந்த முன்னாள் ஜனாதிபதி யாஹ்யா கான் உட்பட சம்பந்தப்பட்ட யாவரும் தண்டிக்கப்படவேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

---

## நடமாடும் வைத்தியசாலை

லண்டன், பெப். 1

ஜன சஞ்சாரம் குறைந்த பிரதேசங்களிலும், அபிவிருத்தி அடையாத இடங்களிலும், வாகனப் போக்குவரத்துகள் குறைந்த இடங்களிலும் வைத்திய சேவைகளை உடனுக்குடன் அளிப்பதற்கான நடமாடும் வைத்தியசாலைகளை ஒரு பிரிட்டிஷ் கம்பனி அமைத்துள்ளது.

இவ்வைத்தியசாலையில் ஆலோசனை அறை, பரிசிலனை அறை, மருந்தளிக்கும் அறை, அம்புலன்ஸ் வண்டி ஆகியன இருக்கின்றன. இங்கு ஒரு வைத்தியர், நான்கு தாதிகள், இரு வைத்திய உதவியாளருடன் ஒரு தினத்தில் மொத்தமாக 640 நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கலாம்.

ஒவ்வொன்றும் 23 அடி நீளமான அறைகளைக் கொண்ட. இவ்வைத்தியசாலையை எவ்வித நிலைமைகளிலும் பாவிக்கலாம். மலேரியா, சின்னம்மை அல்லது கடும் பாய்ச்சுரம் போன்ற தொற்று வியாதிகள் உள்ள இடங்களில் இந்த நடமாடும் வைத்தியசாலையை ஒரு நிரந்தர சிகிச்சை நிலையமாகப் பாவிக்கலாம். அறுவைச் சிகிச்சைக்கூடமன்றி, பல் வைத்தியசாலை, எக்ஸ்ரே வைத்தியப் பிரிவு, இரத்த வங்கிப் பிரிவு போலவும் இவற்றைப் பாவிக்கலாம்.

---

## இடமாற்றம்

குருநகர், செவ்வாய்

இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றிய திரு. சந்திரசேகரம் இன்று முதல் யாழ் கொழும்புத்துறை மகாவித்தியாலய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். தற்பொழுது கொழும்புத்துறை மகாவித்தியாலயத்தில் அதிபராக இருந்த திரு இ. செல்வராசா கொழும்புத்துறை கிழக்கு துரையப்பா கனிஷ்ட வித்தியாசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இப் பாடசாலை யாழ்ப்பாணத் தொகுதியில் மாதிரி வித்தியாலயமாக அமைக்கப்பட்டுள்ளது.

---

லண்டன் டெரி துப்பாக்கிப் பிரயோகம்

# விசாரணை செய்ய பிரிட்டிஷ் அரசு முடிவு

லண்டன், பெப். 1

வட அயர்லாந்தில் நடைபெற்ற கலவரங்கள் பற்றி விசாரணை செய்ய பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வட அயர்லாந்திலுள்ள லண்டன் டெரியில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பாரசூட் துருப்புகளுக்குமிடையே நடைபெற்ற கலவரத்தின்போது பொலிஸ் சூட்டில் 13 பேர் கொல்லப்பட்டனர். இதுபற்றி நீதிபதி ஒருவரின் தலைமையிலான குழுவொன்று பகிரங்க விசாரணை செய்யவிருக்கிறது என்று பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் உள்நாட்டமைச்சர் திரு. மோட்லிங் தெரிவித்தார்.

இந்த விசாரணைகள் சுதந்திரமாக நடைபெற வேண்டுமென வட அயர்லாந்து எம்.பி.க்கள் வலியுறுத்தினர்.

இதே நேரத்தில் வட அயர்லாந்தின் பல பகுதிகளிலும் தொடர்ந்து ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடைபெற்றுவருகின்றன.

---

லண்டனிலுள்ள

# ஐரிஸ் தூதுவர் திருப்பி அழைக்கப்பட்டார்

## லண்டன் டெரி கலவரத்தின் எதிரொலி?

டப்ளின், பெப். 1

ஐரிஸ் குடியரசு பிரிட்டனிலுள்ள தனது தூதுவரை அவசரமாக அழைத்துள்ளது. லண்டன் டெரியில் நடைபெற்ற கலவர நிலைமைபற்றி அரசு ஆலோசனை கலப்பதற்காகவே லண்டனிலுள்ள தனது தூதுவரை அவசரமாக அழைத்திருப்பதாக அறியப்படு

[4ம் பக்கம் பார்க்க]

# வைப்புத் திட்டங்கள்?

மேர்கன்டைல் கிறெடிற் லிமிட்டெட்டில்
உங்களுக்கு வேண்டியவர்
DEPOSITS MANAGER

எமது வைப்புப் பணப்பகுதி முகாமையாளர், உங்கள் கேள்விகளுக்குப் பதில் தருவார். அவரை எந்நேரமும் நீங்கள் சந்திக்கலாம். ''பாதுகாப்பான முதலீட்டு வாய்ப் புகள்'' பற்றி ஆலோசனை கூற அவர் எப்பொழுதும் தயாராகவிருக்கிறார். அவருடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் பணத் தினைப் பெருக்குவதற்கு அவர்தான் சரியான ஆள்!

உங்கள் பணத்தினை ஆகக்கூடிய அளவு பெருக்குவதற் கான இரகசியத்தினை எடுத்துரைத்து, எமது பல்வேறு வைப்புப்பணத் திட்டங்கள்பற்றி விளக்குவார்; அத் திட்டங்களாவன......

**காலமுறை வைப்புப் பணம்**

8%—3 மாத அறிவித்தலின்மீது மீளப் பெறமுடியும்

**தவணைமுறை வைப்புப் பணம்**

மாதவித, 6 மாதவித, ஆண்டுவித வட்டி செலுத்தப்படுவதற்குரியதாகும்.

2 ஆண்டு வைப்புப்பணம் — 12%
4 ஆண்டு வைப்புப்பணம் — 13%

**நிலையான வைப்புப் பணம்**

முதிர்வடைவதன்மீது, வட்டி செலுத்தப்படுவதற்குரிய தாகும்.

3 ஆண்டு வைப்புப்பணம் — 13%
5 ஆண்டு வைப்புப்பணம் — 14%

எல்லா வகை வைப்புப்பணத் திட்டங்களின் மீதும் உரிய வட்டியுடன், அவசரமாகத் தொகை ஒன்றை மீளப் பெறுவதற்கான விண்ணப்பங்களைக் கம்பெனி கவனத் திற்கு எடுத்துக்கொள்ளும்.

**மேர்கன்டைல் கிறெடிற் லிமிட்டெட்** இலங்கையின் மிகப்பெரிய நிதிநிறுவனம்

'மேர்க்கன்டைல் ஹவுஸ்' 51-53 இராணி வீதி கொழும்பு-1 தொலைபேசி: 23283—4-5.

MC34-71-MASTERS

# வடபகுதி அபிவிருத்திக்கு சிலயோசனைகள்

பருத்தித்துறை, செவ்.
வடமாநிலவிவசாய அதிகரும் வடமராட்சி பலநோக்குக் கூட்டுறவு இயக்கத்தின் இயக்குநருமான திரு. எஸ். கி. சம்பந்தமூர்த்தி அமைச்சர் சபைக்கும், வடமாகாண அரசாங்க அதிபருக்கும் அறிக்கையொன்றைச்சமர்ப்பித்துள்ளார்.

"வலிகாமம் கிழக்குப் பகுதியில் சுமார் 900 தொடக்கம் 1200 ஏக்கர் வரை உபஉணவுப் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. இதற்கு அரசாங்கம் மான்யம் வழங்குமாயின் இரண்டு மடங்கு வரை ஏற்பட இடமுண்டு. அச்சுவேலி கைத்தொழிற்பேட்டைக்கு அண்மையில் சுமார் பத்தரை ஏக்கர் நிலம் முந்திரிச் செய்கைக்கு உகந்ததாக உள்ளது. இதில் முந்திரி உற்பத்தியை உடனடியாக ஆரம்பிக்கலாம். வலிகாமம் கிழக்குப்பகுதியில் சுமார் 20,0000 அந்தர் உருளைக் கிழங்கு உற்பத்திசெய்யப் படுகிறது. ஆனால் இதைச் சந்தைப்படுத்துவதில் விவசாயிகளைப் பல பிரச்சினைகள் எதிர்நோக்குகின்றன. உள்ளூர் வியாபாரிகள் இவற்றை வாங்க விரும்புவதில்லை. போதிய பசளை கிடைப்பதில்லை. அவற்றைப் பாதுகாத்துவைக்கப் பண்டகசாலைகள் இல்லை. இவற்றைப் பழுதடையாது பாதுகாக்கக் குளிரூட்டி வசதிகள் வேண்டும்".

மேலும் மனேஜர் கூறுவதாவது:

"தொண்டமானாறு நன்னீர்த் திட்டம் 8800 ஏக்கர் செய்கை பண்ணப்பட்ட நிலத்தைப் பாதுகாக்கவும் 6700 ஏக்கர் நிலத்தைப் பண்படுத்தவும் உதவாக்கப்பட்டது. ஆனால் இது வெற்றியளிக்கவில்லை மேலதிக மழைநீர் கடலுக்குச் சென்று கலப்பதற்கான வாய்க்கால்களை வெட்டுவதே இப் பிரச்சினைக்குரிய தீர்வாகும்"

......

## முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், புதன்
ஏழாலை முத்தமிழ்மன்ற மூன்றாவது ஆண்டுவிழா ஏழாலையில் இம்மாதம் 5-ம் திகதி நடைபெறவிருக்கிறது. விழாவில் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், உடுவில் தொகுதி ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சியின் பிரமுகர் திரு. குமாரசுவாமி விநோதன் ஆகியோர் உட்படப் பலர் உரைநிகழ்த்துவர். விழாவை முன்னிட்டு நடாத்தப்படும் கருத்துப்பரிமாறல் பட்டிமன்றத்தில் திருக்குறள் ஒரு வைதீக நூலா? அன்றி புரட்சி பொக்கிஷமா? என்பது பற்றி நாவேந்தன், புதுமைலோலன் உட்படப் பலர் உரைநிகழ்த்துவர்

# இன்றைய பலன்

தை மாதம் 19-ந் திகதி

(2-2-72)

மேஷம்- இறைவழிபாடு மேலிடும்; இதயத்தில் அமைதி குன்றும்; பிதாவழி மூலம் நல்லசெய்திகளும் கிடைப்பதற்கு இடமுண்டு

ரிஷபம்- தொழில் துறையில் முன்னேற்றம் தொடர்ந்து வரும்; புகழ் நிதியில் அபிவிருத்தி; நிம்மதி பிறக்கும்.

மிதுனம்- சிலர் உல்லாசப் பிரயாணம் ஒன்றுக்கு திட்டமிடுவார்கள்; புத்திரர்களால் பெருமைக்கும் இடமுண்டு

கடகம்- உறவுமுறைகளில் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது; அபிப்பிராய பேதங்கள் மறைவதற்கும் இடமுண்டு.

சிம்மம்- நெருங்கிய நண்பர் ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம்; பிள்ளையொன்றின் உடல்நலம்பாதிக்கப்படும்.

கன்னி- நிதியில் நல்ல அபிவிருத்தி காணப்படுகின்றது; நீண்டநாள் கடன்தொல்லை இன்று நிவர்த்தியாகும்.

துலாம்- பேராசையின் மூலம் குறுக்குவழியை நாடுவீர்கள்; இதனால் விபரீதங்கள் தோன்றலாம் முன்னெச்சரிக்கைதேவை.

விருச்சிகம்- ஆக்கப்பணிகளில் ஈடுபடுவார்கள்! பிறருடைய ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் தாய்வழிமூலம் நற்செய்தி கிடைக்கலாம்

தனு- பொதுவாழ்க்கையில் அபிவிருத்தி காணப்படுகின்றது! அமைதியான நடவடிக்கைகள் மூலம் மற்றவர்களுடைய நட்பை பெறுவீர்கள்.

மகரம்- அந்நியவாசம் அமைதிக்கு உலைவைக்கும்; அவசரமான காரியங்களில் ஈடுபவர்கள் மிகவும் கவனத்துடன் நடந்து கொள்ளவும்.

கும்பம்: குடும்பத்தில் குதூகலம் தவழும், சந்திரவழியால் நன்மைகளுக்கு இடமுண்டு பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர்

மீனம்: அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர் சிலர்வாழ்க்கையில் பொருள் முடையும் ஏற்படலாம். திட்டமிட்டுச் செயலாற்றவும்.

சோதிடகலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

2-2-72 புதன்

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45 மாலை 6-00, இரவு 9-00)

29வ மீ அலைக் 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி- மங்கலவாத்தியம் 6-20 சைவ நற்சிந்தனை -வி. சிவத்தையா, 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை 6-50 மரணச் செய்திகள், 7-05 துதிப்பாடல், 7-30 குரல்வளை, 8-00 இசைவேளை எஸ். திலகநாயகம் போல். 8-15 இஸ்லாமியகீதம்,

இரவு 6-15 சிறுவர் நிகழ்ச்சி- நடத்துபவர்: திருமதி மெலோன், 6-30 பாட்டு- பகவதி ரங்கராஜன் கமலா ஹரிஹரஐயர், 7-00 கண்ணகி காவியம், 7-15 திருக்குறள் அமுதம் (17) புலவர் பாண்டியனார், 7-30 வெளிநாட்டுச்செய்திகள், 7-35 மெல்லிசைப்பாடல்கள்: பாடுபவர்- மோகன், தெய்வேந்திரம், 7-45 நாடகம் 'என்ன இது' சிறிக்பர்ஜூண்டோ எழுதியது தயாரிப்பு: கே எம் வாசகர் 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி (நாதசுரம்) எம். பி: பாலகிருஷ்ணன்

---

## ஐரீஸ்..

[1ம் பக்கத்தொடர்ச்சி]

இறது

இதே நேரத்தில் ஐரிஸ் வெளிநாட்டமைச்சர் அமெரிக்காவிற்கு விஜயம்செய்கிறார், லண்டன் டெரி சம்பவம் பற்றி அமெரிக்க அரசுடன் ஆலோசனை செய்வதற்காகவே அமைச்சர் இங்கு விஜயம் செய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. பேச்சுவார்த்தைகள் மூலம் அங்கு அமைதியை ஏற்படுத்த அமெரிக்கா உதவலாம் என அரசு வட்டாரங்களில் பேசப்படுகிறது.

# வட்டு. எம். பியின் இன்னிசைக் கச்சேரி

சுழிபுரம், செவ்வாய்
வட்டுக்கோட்டைத் தொகுதி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. ஆ. தியாகராசா பொன்னாலை வரதராசப் பெருமாள் ஆலயத்தில் நடைபெற்ற ஸ்ரீ நிவாசப் பிரம்ம ஆராதனை விழாவில் கலந்துகொண்டு இசைக்கச்சேரி செய்தார். பக்கவாத்திய சகிதம் இவ் இசைக்கச்சேரி நடந்தது. பக்திக் கீர்த்தனைகளை சுவையாகப் பாடி பக்தர்களையும், மக்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார். ஸ்ரீ தியாகராசா சுவாமிகளின் திருவுருவப்பட ஊர்வல வைபவத்துடன் விழா ஆரம்பமாகியது. நூற்றுக்கணக்கான இசைப்பிரியர்கள் வைபவத்தில் கலந்துகொண்டனர் இராமநாதன் இசைக் கல்லூரி மாணவிகளின் பஞ்சரத்தின கீர்த்தனை நடைபெற்றது முழுநாள் நிகழ்ச்சியாக நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் உயர்தர இன்னிசை புல்லாங்குழல், நாதஸ்வரக் கச்சேரியாகியவை நடைபெற்றன இவ்விழாவுக்கான சகல ஏற்பாடுகளையும் கோவில் அர்ச்சகர் பிரம்மஸ்ரீ ச. வைத்தீஸ்வரசர்மா செய்திருந்தார்.

......

## பயிற்சித் திட்டம் செயலாக்கவில்லையாம்

உடுப்பிட்டி, திங்கள்
ஒரு வருடத்துக்கு முன்னர் வடபகுதியிலுள்ள சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளில் மருந்து கலவையாளர்களாகப் பணிபுரிபவர்களுக்கு மருந்து கலக்கும் முறை பற்றிப் பயிற்சி அளிக்கப்படுமென்று சுற்று நிருபம் மூலம் அறிவிக்கப் பட்டிருந்தபோதிலும் இதுவரையும் இத்திட்டம்செயற்படுத்தப்படவில்லையென்று மருந்துக் கலவையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவர்களுக்குச் சம்பள உயர்வும் வழங்கப்படாமலிருப்பதாகவும், சொற்ப சம்பளத்திலேயே குடும்பம் நடத்தவேண்டியவர்களாக இருப்பதாகவும் தமது இக்கஷ்டங்கள் பற்றி மருந்துக் கலவையாளர், பணியாளர் சங்கம் உள்ளூராட்சி உதவியமைச்சர் திரு. நீல். டீ. அல்விசைப் பேட்டிகண்டு பேச்சுவார்த்தை நடாத்தியதென்றும் தெரிவிக்கப்பட்டது.

......

## அதிசய வாழை

கொடிகாமம், செவ்.
கொடிகாமம் சந்தைப் பகுதியிலுள்ள ஒரு கடையின் பின்பகுதிவளவில்உள்ள 9 அடி உயரமான வாழை ஒன்று நிலத்திலிருந்து 3 அடி உயரத்தில் பெரிய வாழைக் குலை ஒன்றை இறக்கியுள்ளது.

......

## இடமாற்றம்

ஒட்டுசுட்டான், செவ்.
ஒட்டுசுட்டான் சின்னத்தம்பி வித்தியாலயத்தின் தற்காலிக தலைமையாசிரியராக கடமை புரிந்த திரு. க. சச்சிதானந்தசிவம் இம்மாதம் தொடக்கம் கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். இவரின் இடத்துக்கு தலைமையாசிரியர் இதுவரை நியமிக்கப் படாததையை தொடர்ந்து செல்வி க. செந்திவேற்பிள்ளை தற்காலிக தலைமையாசிரியராக கடமைபுரிகின்றார்.

0 0 0

வவுனியா செட்டிகுளப் பகுதியில் காணி அபிவிருத்தி பகுதி ஓவசியராக கடமை புரிந்த திரு. கே. பஞ்சாட்சரம் இம்மாதம்முதல்தையன் கட்டு அபிவிருத்திதிட்டத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

# கோடரியால் வெட்டிக் கொன்றவருக்கு மரணதண்டனை!

காலி, செவ்.
காலி அசைஸ் நீதிமன்ற நீதியரசர் வி. வி. தாமோதரம் கே. கே. டேவிட் அப்புஹாமி என்பவருக்கு மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

மீட்டியாகொடைப் பொலிஸ் பகுதியிலுள்ள மன்னப்பிட்டியாவைச் சேர்ந்த அப்புஹாமி என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த டபிள்யூ. ஏச். லாண்டி என்பவரை 1970-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24-ந் திகதி கோடரியால் வெட்டிக் கொலைசெய்ததாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கிலேயே நீதியரசர் மேற்படி தீர்ப்பை வழங்கினார்.

லாண்டியின் மனைவி சிறியவதி என்பவரைக் கோடரியால் வெட்டிக் கொலை செய்ய முயன்றார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

கொலைசெய்யப்பட்ட நபருக்குச் சொந்தமான மஹோகனி மரம் ஒன்றை சந்தேகநபர் வெட்டும்பொழுது கொலையுண்டவர், ஏன் அம் மரத்தை வெட்டுகிறாய் என்று கேட்டபொழுது தன் கையிலிருந்த கோடரியால் கொலையுண்ட நபரை வெட்டிய பின் அவரது மனைவியையும் வெட்டினார் என்று விசாரணையின் பொழுது தெரிவிக்கப்பட்டது.

முதலாவது குற்றச்சாட்டுக்கு சாதகமாக ஐந்து ஜூரர்களும் எதிராக இரண்டு ஜூரர்களும் கருத்துத் தெரிவித்ததைத்தொடர்ந்து எதிரிக்கு நீதியரசர் வி. வி. தாமோதரம் மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

2-வது குற்றச்சாட்டுக்காக 5 வருட கடுழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

# மாநகரசபை உறுப்பினர் புதிய சமாதான நீதவான்

குருநகர், செவ்.
யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினரும் சமூகசேவையாளருமான திரு எம். எஸ். பேரின்பநாயகம் யாழ் மாவட்ட நீதவான் திரு பரமகுரு முன்னிலையில் இன்றுகாலை யாழ் மாவட்ட சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவ் வைபவத்தில் யாழ் மாநகரசபை மேயரும் உறுப்பினர்களும் வழக்கறிஞர்களும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலை உத்தியோகப் பற்றற்ற மேற்பார்வையாளராகவும் கூட்டுறவு சங்கங்கள் லங்காசலுசல ஆகிய ஸ்தாபனங்களின் மேற்பார்வையாளராகவும் இருந்தவரும் இவர் யாழ் வர்த்தக கூட்டுறவு துறைமுக பொதுசேவை சங்க செயலாளராகவும் வடமாகாணமீன்பிடி அபிவிருத்திக் கமிட்டி உறுப்பினராகவும் யாழ் மீன்பிடி ஆலோசனைச்சபை உறுப்பினராகவும் சேவையாற்றி வருகின்றார்.

## "ஜே. ஆரிலும் ஆற்றலுடையோர் உள்ளனர்"

பருத்தித்துறை, செவ்.
"ஜே. ஆர். ஜெயவர்த்தனவிலும் பார்க்க ஆற்றல் மிகுந்தவர்கள் இன்றைய அரசாங்கத்தில் உள்ளனர். கடந்த முப்பது ஆண்டுகளுக்குமேல் ஆட்சி பீடத்தில் முக்கிய அமைச்சர் பதவிகளை வகித்த திரு. ஜெயவர்த்தன தமது நிர்வாகத் திறமையின்மை மூலம் நாட்டின் பொருளாதாரத்தைச் சிதைத்து வந்துள்ளார். முற்போக்கான நடவடிக்கைகளை எதிர்த்துள்ளார். சோஷலிசத்துக்கு முரணாக வாதிட்டுள்ளார், இவருக்கு இன்றைய அரசாங்கத்தில் இடமிருக்க முடியாது."

இவ்வாறு பருத்தித்துறை நகரசபை உபதலைவர் திரு. எஸ். சேருதிராசா, துன்னாலை கம்யூனிஸ்ட் வாலிபர் கழகக் கூட்டத்தில் உரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டார் திரு கே எஸ் சிதம்பரநாதன் தலைமைதாங்கினார்.

## கவனிப்பார் இன்றி பாடசாலை

பூநகரி, செவ்வாய்
பூநகரி-சங்குப்பிட்டி வீதியிலுள்ள பரம்பன்கிராய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் கூரை புயற்காற்றினால் தூக்கி வீசப்பட்டமையினால் இப்பாடசாலை உபயோகிக்கமுடியாத நிலையில் உள்ளது. பாடசாலை ஆரம்பமாகி ஒருமாதமாகியபோதும் இப்பாடசாலை கவனிப்பாரற்றுள்ளதுடன் மாணவர்களும் பாடசாலைக்குச் செல்ல முடியாது பெரும் கஷ்டம் அடைகின்றனர். இதுபற்றிக் கல்விப்பகுதி உயர் அதிகாரிகளுக்குத் தெரிவித்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அறியப்படுகிறது.



Mosquitoes..?
BAYGON
wipes out pests!
BAYER
பேகோன்
ஹெகெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி,
கொழும்பு.

உடன் விற்பனைக்கு
கட்டிடக் காணி
திருநெல்வேலி — பலாலிரோட், 2ம் கட்டை
3 பரப்பு (40' X 200' நீள்சதுரம்)
தொடர்பு கொள்ளவும்:-
எஸ். நரசிங்கம் ஜே. பி.
நிகோந ஏல நிலையம்,
1-வது மாடி, சங்கரப்பிள்ளை கட்டிடம்,
166, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
NIKONA SALES

# மாதகலில் இந்திய மீனவர்!

மாவிட்டபுரம், செவ்.

சென்னையில் இருந்து மீன் பிடிக்க பாம்பனுக்கு வந்த 9 மீனவர்கள் புயலில் அகப்பட்டு மாதகல் கரையை வந்தடைந்தனர்.

சென்னையைச் சேர்ந்த பி. கணபதி, என். மக்கிரிசாமி, ஆர். தங்கவேலு, சி. பச்சை, என். மாடசாமி, என். ஆதிஅப்பன், ம. பேச்சிப்பிள்ளை, கு. மர்ஜூந்து ஆகியோர் எம் எஸ் சி 4, 5 இலக்கம் கொண்ட இரு படகுகளில் மீன்பிடிப்பதற்காக சென்னையில் இருந்து பாம்பனுக்குச் செல்லும் சமயம் கடலில் ஏற்பட்ட திடீர் புயலினால் திசைதிரும்பி நடுக்கடலில் இரு தினங்கள் தத்தளித்து நேற்று மாதகல் கரையை அடைந்தனர். இவர்களை இராணுவம் கைது செய்து காங்கேசன்துறைப் பொலிசில் ஒப்படைத்துள்ளது. பொலிசார் விசாரணை நடாத்தி வருகிறார்கள்.

# யாழ். நவீன மார்க்கட் கடைகள் இவ்வாரம் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், புதன்

யாழ் நவீன மார்க்கட்டில் கடைகள் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு கடைகள் வழங்கப்படும் வேலை இவ்வாரம் நடைபெறுமென்று யாழ் மேயர் திரு. அல்பிரட் துரையப்பா தெரிவித்தார்.

இம்மாதம் 15ம் தேதி மைற் ஸ்தாபனத்தார் நவீன மார்க்கட்டின் பொறுப்பை மாநகரசபையிடம் ஒப்படைப்பார்கள்.

நவீன மார்க்கட்டில் கடைகள் பெறுவதற்கு சுமார் 1000 பேர் விண்ணப்பித்தனர். சிறிய, பெரிய கடைகளைச் சேர்த்து மொத்தம் 152 கடைகள் நவீன மார்க்கட்டில் அடங்கியிருக்கிறது.

மாநகரசபையின் அனுமதியுடன் கடையில் சிறிய திருத்தங்கள் செய்ய கடைக்கு உரியவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

புதிய அரசியல் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் பிரதமர் நவீன மார்க்கட்டை திறந்து வைப்பார் என மேயர் தெரிவித்தார்.

நவீன மார்க்கட் மேல்மாடியிலுள்ள பெரிய கடைகளுக்கு 200 ரூபாவும் கீழ் பகுதியிலுள்ள பெரிய கடைகளுக்கு 250 ரூபாவும் இரு பகுதியிலுமுள்ள சிறிய கடைகளுக்கு 100 ரூபாவும் வாடகைப்பணமாக அறவிடுவதென சபை முடிவுசெய்துள்ளது.

……

### டாக்காவில் மக்னமாரா

டாக்கா, பெப். 1

உலக வங்கித் தலைவர் திரு மக்னமாரா இன்று பங்களாதேஷ் தலைநகரான டாக்காவுக்கு விஜயம் செய்து பங்களாதேஷ் பிரதமர் ஷேக் முஜிபுர் ரஹ்மானுடனும் நிதியமைச்சர் தாஜுதீன் அஹமதுடனும் பேச்சுவார்த்தை நடத்தினார்.

……

### எதிரி விடுதலை

கொழும்பு, செவ்.

வெள்ளவத்தையைச் சேர்ந்த பி. பாலச்சந்திரன் என்பவர் எஸ். செல்வரத்தினம் என்பவரைத் தாக்கி பெய்ராக்காலாய்க்குள் வீழ்த்திக்கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரியான பாலச்சந்திரன் இன்று கொழும்பு அசைஸ் நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டார்.

சாட்சியங்களைத் தொடர்ந்து விசாரணையை மேலும் நீடிக்கவேண்டியதில்லையென ஜூரிமார் அபிப்பிராயம் தெரிவித்ததன்மீது அசைஸ் கமிஷனர் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார். (நா)

### திறப்புக்கோர்வை யாருடையது?

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த கே. இராசலிங்கம் என்பவர் அதே வீதியில் திறப்புக் கோர்வை ஒன்றைக் கண்டெடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

### பிரிட்டன் அங்கீகரிக்கும்

லண்டன், பெப். 1

பிரிட்டன் பங்களாதேஷ் குடியரசை விரைவில் முறைப்படி அங்கீகரிக்குமென பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் சேர் அலெக்ஸ் டக்ளஸ் ஹியூம் தெரிவித்தார்.

பங்களாதேஷ் மக்களின் எண்ணத்தை பிரதிபலிப்பதாக பங்களாதேஷ் இருப்பதனால் பிரிட்டன் பங்களாதேஷை அங்கீகரிப்பதென முடிவுசெய்ததாகத் தெரிவித்த அவர் எப்பொழுது பிரிட்டன் பங்களாதேஷை அங்கீகரிக்குமெனத் தெரிவிக்கவில்லை.

பாகிஸ்தான் காமன்வெல்த்திலிருந்து வெளியேறுவதென்று முடிவுசெய்திருப்பது வருத்தத்துக்குரியதென அவர் மேலும் தெரிவித்தார்.

**பல்கேரியா அங்கீகாரம்**

பல்கேரியா பங்களாதேஷை அங்கீகரிப்பதென முடிவு செய்துள்ளது.

**ஹங்கேரியுடன் துண்டிப்பு**

ஹங்கேரி பங்களாதேஷை அங்கீகரித்ததைத் தொடர்ந்து அந்நாட்டுடனான ராஜிய உறவை துண்டித்திருப்பதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

### புதிய இலாகா

கோட்டை, செவ்வாய்

மதவிவகாரங்களைத் தேசியரீதியில் கவனிக்கத் தனியானதொரு இலாகாவை நிறுவ அரசு தீர்மானித்துள்ளது.

குடியரசு அரசியல் திட்டம் அமுலுக்கு வந்ததும் இந்தப் புதிய இலாகா அமைக்கப்படும் என கலாச்சார விவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

……

### 2—வது சுத்திகரிப்பாலை

கோட்டை, செவ்வாய்

இலங்கை இரண்டாவது எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலை ஒன்றை அன்னிய, தனியார் ஒத்துழைப்புகளுடன் திருகோணமலையில் நிறுவவிருக்கிறது. அரசாங்கத்தின் ஏகபோக உரிமையாகவிருக்கும் பெற்றோலிய வர்த்தகத்தில் இதுகாலவரையுமில்லாதவாறு முதல் தடவையாக அன்னிய, தனியார் முதலீடுகள் ஏற்றுக்கொள்ளப்படவிருக்கின்றன.

**யாழ் மாவட்டத்தில்**

# 9 பனைவெல்லத் தொழிற்சாலைகள் அமைக்க அரசு அங்கீகாரம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒன்பது இடங்களில் பனைவெல்லத் தொழிற்சாலைகள் திறக்கப்படவிருக்கின்றன. இவற்றை நிறுவுவதற்கு திட்ட அமைச்சு அங்கீகாரமளித்துள்ளதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா தெரிவித்தார்.

மாதகல், சங்கானை, இலந்தைமடி, அல்வாய் வடக்கு, பலாலி, வரணி, அம்பன், கொட்டடிபாலத்தை முதலிய இடங்களில் பனை வெல்லத் தொழிற்சாலைகள் அமைக்கப்படும்.

இத் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு சுமார் ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

### ஆஸ்திரேலியா பயிற்சியாளர் யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், செவ்.

அவுஸ்திரேலிய சர்வதேச வலைப்பந்தாட்டப் பயிற்சியாளர் செல்வி லோனா மெக்கொன்சி இன்று இலங்கை வருகின்றார்.

இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தின் அழைப்பின் பேரில் இங்கு வரும் செல்வி லோனா மெக்கொன்சி இங்கு இரண்டு வாரகாலம் தங்கியிருந்து யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, அநுராதபுரம் ஆகிய இடங்களுக்குச்சென்று வலைப்பந்தாட்டப் பயிற்சி அளிப்பார்.

செல்வி லோனா மெக்கொன்சி இம்மாதம் 9ம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றார். இங்குள்ள பாடசாலை மாணவிகளுக்கும் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இவர் வலைப்பந்தாட்டப் பயிற்சி அளிப்பார்.

ஓர் சர்வதேச விளையாட்டு வீராங்கனை விளையாட்டுப் பயிற்சிக்காக யாழ்ப்பாணத்துக்கு வருவது இதுவே முதற் தடவையாகும். [தே நி]

### வெற்றி தோல்வியில்லை

மாவிட்டபுரம், திங்கள்

அளவெட்டி புளூஸ்டோஸ் விளையாட்டுக் கழகமும், அளவை மத்திய கழகமும் மோதிய இறுதிப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

காங்கேசன்துறை ரோமல் விளையாட்டுக் கழகம் நடாத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் மூன்றாம் பிரிவு இறுதிப் போட்டியில் இரு கழகங்களும் மோதிக்கொண்டன.

இரு கழகங்களும் கடும் மோதலில் ஈடுபட்டு இருதரப்பினரும் தலா 1 கோலைப் போட்டதால் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிந்தது. இப் போட்டிக்கு திரு பாலசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

……

### கருத்தரங்கு

வல்வெட்டித்துறை, திங்கள்

வல்வெட்டித்துறை தமிழரசு வாலிப முன்னணியினரால் ஒழுங்கு செய்யப்பட்ட அரசியல் கருத்தரங்கில் சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம், கோப்பாய் எம். பி. திரு எஸ். கதிரவேலுப்பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர். இக்கருத்தரங்கில் தமிழ்மக்களின் எதிர்கால நிலை பற்றியும் அதற்கு அவர்கள் வேண்டிய கடமைகள் பற்றியும் விளக்கப்பட்டது.

### இலக்கியச் சந்திப்பு

பருத்தித்துறை, செவ்.

கரவெட்டி மேற்கு முற்போக்கு வாலிபர் இயக்கம் இம்மாத நடுப்பகுதியில் ஓர் இலக்கியச் சந்திப்பை ஒழுங்கு செய்துள்ளது. கலாநிதி கா. சிவத்தம்பி தலைமையில் நடக்கவிருக்கும் இச்சந்திப்பில் திருவாளர்கள் டொமினிக் ஜீவா, தெணியான், சபா ஜெயராசா ஆகியோர் கலந்துகொள்ளவிருப்பதாகத் தெரிகிறது.

### விசாரணை அதிகாரி

கோட்டை, செவ்

மாநகரசபை நகரசபை முதலிய உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகம் பற்றி விசாரணை செய்வதற்கென மூத்த உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். உள்ளூராட்சி மன்றங்கள் பற்றிய குற்றச்சாட்டுகள் பற்றியும் மன்றங்களின் நிர்வாகம் பற்றியும் ஆராய்ந்து ஆறுமாதத்துக்கு ஒரு தடவை இவர்கள் அறிக்கை சமர்ப்பிப்பர்.

### கடன் மசோதா நிறைவேறியது

கோட்டை, செவ்

உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்கு கடன் வழங்குவதற்கு வகை செய்யும் மசோதா இன்று ஆட்சிமன்றத்தில் நிறைவேறியது.

### யாழ்நகரில் புதுமை மாதா ஆலய திருநாள்

யாழ்ப்பாணம், புதன்

வரலாற்றுப் பெருமை மிகுந்த யாழ்நகர் புனித புதுமைமாதா ஆலய திருநாள் இன்று கொண்டாடப்படுகின்றது. காலை 7 மணிக்கு திருநாள் பாடற்பூசை ஒப்புக் கொடுக்கப்படும். பிற்பகல் 4 மணியளவில் திருச்சொரூப பவனி நடைபெறும். இப் பவனி வங்கசாலை வீதி, கேணியடி வீதி, கடற்கரைவீதி, தண்ணீர்த் தாங்கிவீதி, தண்ணீர்த் தாங்கி முதலாம் குறுக்கு வீதி, சென் ஜேம்ஸ் பெண்கள் வித்தியாலயவீதி, றெக்லமேசன் இரண்டாம் குறுக்கு வீதி, சென் ஜேம்ஸ் வீதி ஆகிய வீதிகள் வழியாக நடைபெறும்.

உதவி மேற்றிராணி ஆண்டகை எல். ஆர். அன்ரனி மாலை திருநாள் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

### 'ஆலயங்களுக்கு செல்ல வேண்டிய அவசியம்'

யாழ்ப்பாணம், செவ்

'ஊனுடைப் பிறவியை அறுக்க நாம் ஆலயங்களுக்குச் சென்று தரிசனம்செய்ய வேண்டும்.'

இவ்வாறு பண்டிதர் செ. சிவலிங்கம் கூறினார்.

மீசாலை திருநீலகண்டப்பிள்ளையார் கோவில் சங்காபிஷேக மணவாளக்கோல விழாவில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு சொன்னார்.

தலைத்து மண்டபத்தில் சங்காபிஷேக விழா இரவு விமரிசையாக நடந்தது. சைவச் சிவமணி கல்வயல் கி. வீரசித்தம்பி 'நம்பியாண்டார் நம்பி' என்னும் பொருள் பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் செய்தார் (கு வி ம)

### இசைக்கச்சேரி

உடுப்பிட்டி, புதன்

அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைமன்றத்தில் இசைபயின்று சங்கீதபூஷண பட்டம்பெற்ற செல்வன் சி. பத்மலிங்கத்தின் முதலாவது இசைக்கச்சேரி இன்று மாலை இலங்கை வானொலியில் இடம்பெறவுள்ளது.

### தொல்புரத்தில் இலவச சினிமாப்படக்காட்சி

யாழ்ப்பாணம், புதன்

தொல்புரம் மத்திய சனசமூக நிலைய வாசிகசாலை முன்றலில் அரசாங்க தகவற் பகுதியினரால் வலிமேற்குக் காரியாதிகாரி சிபார்சின் பேரில் இலவசசினிமாப் படக்காட்சியொன்று காண்பிக்கப்பட்டது.

காட்சியில் மிளகாய்ச் செய்கை, மகாதேசாதிபதியின் யாழ் விஜயம், நாவலர் முத்திரை வெளியீடு, பொதுமக்களுக்காக மக்கள் அரசாங்கம் ஆற்றும் சேவைகள் உட்படப் பல காட்சிகள் காண்பிக்கப்பட்டன.

படமுடிவில் இப்படத்தினை நிலையத்தில் காண்பிக்க ஒழுங்குசெய்த யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜ யாழ். கிளைக் காரியதரிசி திரு. சி. வ. வரதராசா, திரு இ. சோதிராசா திரு. ச. முருகையா, திரு. சி. கிருஷ்ணமூர்த்தி, திரு. ஆசுபதேவன், வலிமேற்குக் காரியாதிகாரி, தொல்புரம் கிராமசேவையாளர் ஆகியோரின் சேவைகளைப் பாராட்டி நிலையக் காரியதரிசி திரு. மு. சடாட்சரம் நன்றியுரை கூறும்போது பேசினார்.

### அடம்பன் ஆஸ்பத்திரியில்...

கேதீஸ்வரம், செவ்.

அடம்பன் ஆஸ்பத்திரியில் மருந்துவகைகளுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது. நோயாளர்கள் பெரிதும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். சுமார் இருபதாயிரம் மக்கள் தொகையைக் கொண்ட பகுதியொன்றுக்கு இந்த ஆஸ்பத்திரியே உதவுகின்றது. இங்கு மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் நோயாளர்கள் எட்டுமைல் தூரத்திலுள்ள மன்னார் ஆஸ்பத்திரியையே நாடுகின்றார்கள்

### மணிவாக்கு

உண்மை அரசு செலுத்துமிடத்தில் வெற்றி தோன்றும். இது பரிசுத்தத்திலேதான் உண்மை அழகு இருக்கிறது. அஹிம்ஸாதத்துவம் ஒரு நாட்டைப் பரிசுத்தமான ஜனநாயகத்தில் கொண்டு போய்விடும்.

—காந்தியடிகள்.

ஈழநாடு
Ceylon's National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 48 Jaffna Telephone: 389

இன்று விரோதிகிருது வருஷம் தை மாதம்
19-ந் திகதி (2-2-72)

## வேற்றுமைகளை மறந்து...

தற்போதைய கஷ்டங்களிலிருந்தும் நெருக்கடிகளிலிருந்தும் நாட்டைக் காப்பாற்ற வேண்டியது தேசாபிமானமுள்ள மக்களின் கடமையாகுமென்றும் எல்லா அரசியல் கட்சிகளும் தமது அரசியல் வேறுபாடுகளை மறந்து நாட்டின் நன்மைக்காக ஒன்றுபட வேண்டுமென்றும் வண. மாதிகே பஞ்ஞாசிஹ மகாநாயக்கதேரோ கூறியிருப்பது அரசியல்கட்சித் தலைவர்கள் மட்டுமல்ல இந்நாட்டின் பொதுமக்கள் அனைவரும் சிந்தனைக்கெடுத்துக் கொள்ள வேண்டிய விஷயமாகும்.

நமது நாடு அரசியல் விடுதலை பெற்று கால்நூற்றாண்டாகிறது. இந்தக் கால் நூற்றாண்டு காலத்தில் நாட்டைப் பலவழிகளிலும் முன்னேற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த முயற்சிகள் எதிர்பார்த்த பலனைக் கொடுக்கவில்லையென்றாலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவென்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வர். நமது நாட்டுடன் அரசியல் விடுதலைபெற்ற ஆசிய ஆபிரிக்க நாடுகள் பலவற்றிலும் ஜனநாயகம் தோல்வியடைந்துள்ளது. ஆசிய ஆபிரிக்கக் கண்டங்களில் ஜனநாயகம் இன்னமும் பரீட்சார்த்த நிலையிலிருந்த போதிலும் பல நாடுகளிலும் அது தோல்வியடைந்துவிட்டது.

கட்சி அரசியல் முறைதான் பல நாடுகளிலும் ஜனநாயகம் தோல்வியடைவதற்குக் காரணமாக இருந்திருக்கிறது. நமது நாடும் கூட பொருளாதாரத்தில் முன்னேற முடியாமலிருப்பதற்கும் இதுவே பெருமளவில் காரணமாக இருக்கிறது. நாட்டின் நன்மையைவிட சமூகத்தின் நன்மையைவிடக் கட்சியின் நலனே பெரிதென மதிக்கும் மனப்பான்மை இங்கு வளர்ந்துவிட்டதே இதற்குக் காரணமாகும்.

ஜனநாயக நாட்டில் சோஷலிஸம் இருப்பதில்லை; சோஷலிஸ நாட்டில் ஜனநாயகம் இருப்பதில்லை. இரண்டையும் ஒன்று சேர்த்துக்கொண்டு போவதென்பது சுலபமான விஷயமல்ல. எல்லோரும் சோஷலிஸம் பேசும் காலம் இது. அதுடன் எல்லோரும் ஜனநாயகம்பற்றியும் பேசும் காலமும் இது. இந்த நெருக்கடியிலும் ஜனநாயகத்தைப் பாதுகாத்துக் கொண்டு சோஷலிஸப் பாதையிலும் நடைபோடும் அரசாங்கம் பாராட்டுக்குரியது.

என்றாலும் நாட்டின் இன்றைய நிலை "எரிமலை மீது நாம் அமர்ந்திருக்கிறோம்" என்று பிரதமர் குறிப்பிட்டதிலிருந்தும் "ஜனநாயகம் நமது நாட்டில் ஊசலாடுகிறது" என்று எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டதிலிருந்தும் தெளிவாகியுள்ளது.

இந்நிலையில் ஜனநாயகத்தையும் நாட்டையும் ஆபத்திலிருந்து காப்பாற்றுவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா கட்சி நலனைவிட நாட்டின் நலனைப் பெரிதாகக் கருதி அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு அளிக்க முன்வந்திருப்பது ஆளும்கட்சியிலுள்ளவர்கள் சிலருக்கும் மற்றவர்களுக்கும் பலவித சந்தேகங்களை ஏற்படுத்தினாலும் ஒரு நல்ல முன் மாதிரியென்றே சொல்ல வேண்டும்.

கால்நூற்றாண்டுக்கு முன்னர் அதாவது நாடு அரசியல் விடுதலையடைந்த சமயத்திலிருந்த நிலைமையைவிட இன்று மிக ஆபத்தான நிலை ஏற்பட்டிருக்கிறது. 'சுவர் இருந்தால்தான் சித்திரம் தீட்டலாம்' என்பது முதுமொழி. கட்சிப் போராட்டம் மற்றும் பல பிரச்னைகளும் நாடு நல்ல நிலையில் இருந்தால்தான் செய்ய முடியும். இதை அரசியல் தலைவர்கள் உணர்ந்து கொண்டு நாட்டையும் எதிர்காலச் சந்ததியினரையும் கருத்திற்கொண்டு பொதுத் திட்டமொன்றை வகுத்து அதைச் செயல்படுத்த வேண்டிய அவசியம் இன்று போல் என்றும் இருந்ததில்லை.

இந்நிலையில் இந்நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் என்ன செய்யப்போகின்றன? அரசியல் அமைப்பையே மாற்றியமைக்கின்ற இக்கட்டத்தில் சிறுபான்மையினருக்கும் நம்பிக்கை அளிக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தினால்தான் இன, மத, கட்சி பேதமற்ற முறையில் ஒரு பொதுத் திட்டத்தின்கீழ் நாட்டை முன்னேற்றுவதற்கு இந்நாட்டு மக்கள் ஒன்றுபடுவார்களென்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

### திறப்பு விழா

தாவடி. திங்கள்

தாவடி காந்தி கலைவளர்ச்சி மன்றத்தின் வாசிகசாலை ஒன்று அண்மையில் திறக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் மேற்படி மன்ற மண்டபத்தில் சொற்பொழிவுகளும் பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

……

### புராணப் படிப்பு

யாழ்ப்பாணம், புதன்

கைதடி வயோதிபர் நிலையத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமான் ஆலயத்தில் மார்கழி மாதத்தில் திருவாதவூரடிகள் புராணப் படிப்பு நடைபெற்று முடிந்தது. இதில் பலர் கலந்துகொண்டனர்.

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, செவ்.

நாவலப்பிட்டியில் நேற்று இழுக்கப்பட்ட ஜாதிக சம்பத சுவீப் சீட்டிழுப்பில் பரிசுபெறும் டிக்கட்டுகள் பின்வருமாறு. இவை ஒவ்வொன்றும் தலா ரூபா 63,070-00 பெறுவன

முதலாம் பரிசு:
08 W 000949
இரண்டாம் பரிசு:
09 C 000453
மூன்றாம் பரிசு:
05 C 000356

ரூபா 315-35 சதம் ஆறுதல் பரிசுபெறும் 200 டிக்கட்டுகள் வருமாறு:

09 A 000288 04 A 00842
08 A 000593 09 A 000803
22 A 000382 19 A 000498
20 A 000442 26 A 000471
26 A 000203
06 B 000568 09 B 000864
08 B 000149 09 B 000282
08 B 000572 17 B 000837
20 B 000819 23 B 000898
22 B 000318
04 C 000627 09 C 000009
07 C 000264 14 C 000335
17 C 000715 18 C 000148
18 C 000563
02 D 000941 26D 000150
13 D 000429 19D 000066
22 D 000960 22D 000662
19 D 000176 12D 000815
18 D 000978
02 E 000825 07 E 000846
25 E 000113 26 E 000561
23 E 000212 14 E 000512
16 E 000277 11 E 0 0817
01 F 000002 01 F 000697
06 F 000814 21 F 000715
12 F 000969 13 F 000743
16 F 000304
09 G 000509 03 G 000106
08 G 000106 05 G 000301
06 G 000560 05 G 000089
07 G 000563 05 G 000917
27 G 000682 22 G 000599
19 G 000988 23 G 000295
25 G 000435 15 G 000095
11 G 000714
02 H 000987 07H 000660
04 H 000556 05H 000797
07 H 000083 10 H 000681
21 H 000113 20H 000859
16 H 000483 22H 000201
03 J 000517 03 J 000404
26 J 000182 17 J 000673
19 J 000891 23 J 000025
12 J 000082 11 J 000032
05 K 000588 05K 000596
17 K 000400 24K 000116
20 K 000016 20K 000901
14 K 000374
05 L 000026 16 L 000408
11 L 000848 11 L 000869
19 L 000698 24 L 000181
16 L 000316 17 L 00085
09M 000095 03 M 000427
08M 000189 14M 000075
25M 000189 26M 000618
24 M 000716
08 N 000596 05N 000851
24N 000996 11 N 000640
17 N 000894
03O 000301 20O 000637
20 O 000347 18 O 000323
23 O 000914 15 O 000228
04 P 000438 01 P 000476
01 P 000172 05 P 000208
12 P 000829 12 P 000260
17 P 000453 18 P 000913
08 Q 000851 10 Q 000682
04 Q 000482 06 Q 000871
08 Q 000376 13 Q 000998
21 Q 000868 24 Q 000151
26 Q 000015 25 Q 000513
02 R 000022 05 R 000340
14 000462 17 R 000633
20 R 000734
06 S 000277 05 S 000538
21 S 000836 26 S 000921
12 S 000659 24 S 000612
22 S 000612 26 S 000960
27 S 000866 13 S 000026
08 T 000601 07 T 000172
26 T 000484 17 T 000555
26 T 000293 20 T 000841
26 T 000970
09 U 000880 08U 000623
11 U 000363 04U 000350
16 U 000768
07 V 000214 08 V 000321
07 V 000245 07 V 000373
09 V 000581 11 V 000025
22 V 000965 21 V 000018
12 W 000791 17W 000797
14 W 000937
05 X 000097 20 X 000512
26 X 000942 23 X 000866
13 X 000721 03 X 000969
12 X 000838
09 Y 000043 02 Y 000287
05 Y 000129 08 Y 000352
02 Y 000269 05 Y 000679
05 Y 000157 16 Y 000714
16 Y 000671 13 Y 000736
23 Y 000153 23 Y 000643
17 Y 000004
07 Z 000684 10 Z 000352
08 Z 000789 24 Z 000148
25 Z 000019 10 Z 000042
23 Z 000046 10 Z 000324
16 Z 000771

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை.)

### இன்று பரிசுத்த

## காணிக்கைமாதா திருநாள்

பரிசுத்த காணிக்கைமாதாவின் சுத்திகரத் திருநாள் இன்று கொண்டாடப்படுகின்றது. வருடா வருடம் இம் மகோற்சவம் மிகப் புனிதமும் அருட்சியும் நிறைந்த கத்தோலிக்கப் பெருவிழாவாக நிறைவேறி வருகின்றது. பக்தர்கள் இத்திருநாளில் ஆனந்த விசுவாசத்தால் மாதாவைக் காணத்திரண்டு வருவர். அற்புதக்கன்னி, தேவதாய், அருட்செல்வி, அன்னைமேரி, புதுமைமாதா என்றெல்லாம் அழைக்கப்படும் யேசுவின் தாயார் தம்புத்திரனை இறைமகனைக் கோவிலில் காணிக்கைவைத்துப்பரனைப் பணிந்து நின்ற சம்பவம் நல்லதூயநாளின் பொருளாய் அமைகின்றது.

காணிக்கைத் தாயின் திருநாளான இன்று யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் திரள் திரளாகக் கூடித் தேவதாயைத் தரிசிப்பர். தமது குறைகளை மனமாரக்கூறி நிறைவுபெற்றோராய் ஆனந்தப்பரவசமெய்திப் புளகாங்கிதம் கொண்டு கண்ணீர் மல்க விடைபெற்றுமீள்வர். ஆசீர்வதிக்கப்பெற்ற மெழுகுவர்த்திகளைத் தம்கரங்களில் பொன்னொளிவெனப் பூரிப்புடன் கொண்டுசெல்வர். தேவதாய் தன் பாலனைக் காணிக்கைவைத்த இந்நாளில் தம்கள் செல்வக் குழந்தைகளைத் தேவதாயின் திருவடி அமர்த்திக் காணிக்கைவைப்பர்.

**பி. எஸ். திருச்செல்வம்**

யாழ்ப்பாணக் கத்தோலிக்க திருச்சபையின் பழம்பெருமைவாய்ந்த புதுமைமாதா தேவாலயம் பக்தகோடிகளின் தனிப்பெரும் புகலிடமாய் தாயின் இருப்பிடமாய், தளராத நம்பிக்கையின் உறைவிடமாய் உள்ளது.

அருசிக்கும், எழுச்சிக்கும், ஆறுதலுக்கும், அரவணைப்புக்கும் உகந்தவளாய், உலகுய்ய மகனைத் தந்தவளாய், அலகையின் தீவினையை வென்றவளாய் ஆண்டிக்கும் அரசர்க்கும் உகந்தவளாய் - பனிவுடை தரித்தவளாய் விளங்கும் காணிக்கை மாதா எம்மைப்பேணிக் கைதூக்குவாள் என்ற பெரும் நம்பிக்கை அவள் திருக்கோலமாய் வலம்வரும் எல்லார் முகத்திலும் பிரத்தியட்சமாய்க் காணலாம். காணிக்கை மாதாவின் சுத்திகரத் திருநாளின்போது ஆசீர்வதிக்கப்பெறும் மெழுகுவர்த்திகள் கிறிஸ்தவ வீடுகளில் அசையாத பெருந்துணையாக அந்தியகால ஒளித்தம்பமாகப் பேணப்பட்டுவருகின்றது. இஃது காணிக்கைத்தாயிடம் மக்கள் கொண்டுள்ள அசையாத நம்பிக்கையைப் புலப்படுத்திக்காட்டுகின்றது.

மிகப்பழமையான காலந்தொட்டு வழங்கப்படுவந்த மோயீசனுடைய பிரமாணத்துக்கு அமைவாக தேவதாயின் சுத்திகர நாட்கள் நிறைவேறிய போது நாதனான தேவபாலனை தேவதாயும் திருத்தாதையும் ஜெருசலேமுக்குக் கொண்டு போகவேண்டியவர்களானார்கள். "ஏனெனில் தாயின் கருப்பையைத்திறந்து பிறக்கும் ஆண்களெல்லாம் ஆண்டவருக்கு அபிஷேகமாக்கப்பட்டது" என கர்த்தருடைய நியாயப் பிரமாணத்திலே எழுதப்பட்டிருக்கிறது. அதன்படி யேசுபாலனைக் கர்த்தர் சந்நிதியில் ஒப்புக்கொடுக்கவும் அச்சமயம் ஒருசோடி காட்டுப் புறாக்களையோ அல்லது இரண்டு மாடப்புறாக் குஞ்சுகளையோ பலிசெலுத்தவும் வேண்டுமென மேற்படி பிரமாண வழக்கைச் செலுத்தவும் அவர்கள் தேவாலயத்துக்குச் செல்லவேண்டியவர்களானார்கள்.

இஸ்ரவேல் சந்ததியினர் எகிப்து ராச்சியத்தில் அடிமைப்பட்டிருந்த காலத்தில் அவர்களை மீட்பதற்காக அந்த இராச்சியக் குடியானவர்களின் தலைப்பிள்ளைகளையெல்லாம் சங்காரம் கொடுத்ததினால் அந்த நன்றிக் கடனாக இஸ்ரவேல் குடிகளின் தலைப்பிள்ளைகள் சருவேசுரனுக்குச் சொந்தமாக வேண்டுமென ஒழுங்கு கற்பிக்கப்பட்டிருந்தது. இவ்வகைக் கட்டளைகள் எல்லாம் ஜென்மபாவத்துடன் பிறந்த பிள்ளைகளுக்கும் பிரசவித்த பெண்களுக்கும் நியமமானது. ஆனால் அற்ப தோஷமுமற்ற அற்புதக் கன்னிக்கும் அவர் திருப்பேறான திவ்விய குழந்தைக்கும் அக்கட்டளை கடமையில்லை. எனினும் அவருடைய தூய கன்னிமையை உலகம் அறியாததினால் தேவகற்பனையைப் புறக்கணிக்கிறார் எனும் அவமதிக்கு ஆளாகாதபடிக்கும் உலக மக்கள் சருவேசுரனின் தேவகற்பனைகளை எத்துணை ஆசாரத்துடன் நிறைவேற்றவேண்டுமென்ற படிப்பினை காண்பிக்கும் படியும் தமக்குக் கடமையற்றதான தேவகட்டளை ஆசாரங்களைக் கைக்கொண்டு காட்டினர். இதற்கேற்ப இறைமகனை ஜெருசலேம் தேவாலயத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தனர்.

இக்காணிக்கைத் திருவிழா இரட்சா பெருமானுடைய அவதாரமான யேசுவின் பிறப்பின் பின்னர் நிகழ்ந்த மகா முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பெருநாள் என்பதை கிறிஸ்த உலகம் நன்குணர்ந்து பூசித்து மன்றாடிவருவது மிகப் பொருத்தமானதே. மக்கள் உள்ளங்கள் தேவனிடத்தில் காணிக்கையாக்கப்படவேண்டுமென்பதை இத்திருவிழா ஊர்ஜிதம்பண்ணுகிறது.

### பாலர் பாடசாலை

பூநகரி செவ்.

மட்டுவில்நாடு மகேஸ்வரி மாதர் சங்கத்தால் பாலர் பாடசாலையொன்று இம் மாதம்முதல் நடத்தப்பட்டு வருகின்றது. இப்பாடசாலையை பூநகரி காரியாதிகாரி திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி திறந்துவைத்தார்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.